



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் – சென்னை – அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர்களான சு.வெங்கடேசன் (மதுரை), சச்சிதானந்தம் (திண்டுக்கல்) ஆகியோர் சந்தித்துப் பொன்னாடை அணிவித்து வாழ்த்துப் பெற்றனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், அரசியல் தலைமைக்குழுஉறுப்பினர் ஜி.இராமகிருஷ்ணன், மத்தியக் குழு உறுப்பினர்கள் பி.சம்பத், பெ.சண்முகம் ஆகியோர் உடன் உள்ளார்கள்.



திருவண்ணாமலை நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்தி அறிவிப்பும் ஆணையும் வெளியிட்டமைக்காக, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, சென்னை – அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு மாவட்டச் செயலாளரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும், பொதுப்பணித் துறை அமைச்சருமான எ.வ.வேலு சந்தித்து, தமது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார். கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, திருவண்ணாமலை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், நகர் மன்றத் தலைவர் உள்ளிட்ட முன்னணியினரும் உடன் உள்ளார்கள்.



வேலூர் மாவட்டம் காட்பாடி ஊராட்சி ஒன்றியம் மேல்பாடி கிராமத்தில் பொன்னை ஆற்றின் குறுக்கே நீர்வளத்துறை சார்பில் ரூ.12.94கோடியில் கட்டப்பட்டுள்ள தரைப்பாலத்தை கழகப்பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். இதில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, ஒன்றியக் குழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், ஒன்றிய கழகசெயலாளர் கருணாகரன், என்ஜினியர் கோபி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


